[1978 செப்டம்பர் 8

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பொதுமக்கள்தான் அதற்கு ஒத்துழைக்க வேண்டும். அப்படி அவர்கள் நடக்கும் போது, உடனடியாக அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், தக்க நடவடிக்கை எடுக்கப்படும். அப்படி எடுக்கப்பட்டு வரு கிறது.

[முற்பகல் 11-10]

திரு. க. மீனாட்சிசுந்தரம் : சட்டமன்ற உறுப்பினர் களுக்கு ரயில் பயணச் சீட்டு இன்றைய தினம் வரையில் வழங்கப் படாத நிலையில் மிகுந்த தொல்லையை நாங்கள் அனுபவிக்கிற காரணத்தால், சட்டமன்ற உறுப்பினர்கள் தனியார் பேருந்து களில் பயணம் செய்வதற்குரிய ஏற்பாடுகளைச் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : சட்டப் பேரவையில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் விரைவில் சட்டமன்ற உறுப் பினர்களுக்கு ரயில் மூலம் பயணம் செய்யும் வாய்ப்பை ஏற்பாடு செய்வதாக அறிவித்திருக்கிறார்கள் என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. இளம்பரிதி : முன்பு கொண்டாடி வந்த 'மரியாதை வாரத்தை' தற்போது கைவிட்டுவிட்டார்களா? ஓட்டுநர்கள், நடத்துநர்கள் எல்லாம் சேர்ந்து முன்பு மரியாதை வாரம் கொண் டாடி வந்தார்கள். இப்போது அதைக் கைவிட்டுவிட்டார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் மாணவர்களுக்கும் பேருந்துப் பயணிகளுக்கும் இடையே நல்லுறவு ஏற்படுத்தும் முகத்தான் நடைமுறையில் இருந்து வந்ததைக் குறிப்பிடுகிறார்கள் என்று கருதுகிறேன். அதை மீண்டும் நடைமுறைப்படுத்த ஏற்கெனவே இரண்டு கருத்தரங் கங்கள் போடப்பட்டிருக்கின்றன. அது பரிசீலிக்கப்படும்.

திரு. இளம்பரிதி : பொதுமக்களிடம் மரியாதையாக நடந்துகொள்ள வேண்டும் என்று முன்பு மரியாதை வாரம் கொண்டாடினார்கள். இப்போது அது போய்விட்டதுபோல் இருக்கிறது.

School Teachers

*43 *Q.*—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that some teachers serving in private schools have made a repesentation to the Government that the period of summer vacation not availed of by them because of attendance in the summer institutes organised by the Madras and Venkateswara Universities, be credited to their earned leave account; and

(*b*) if so, the action proposed to be taken thereon ?

1978 செப்டம்பர் 8]

பள்ளி ஆசிரியர்கள்.

திரு. பி.ஆர். தாமஸ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்.—

(அ) தனியார் பள்ளி ஆசிரியர்கள் சிலர், சென்னை, வெங்கடேஸ்வரா பல்கலைக் கழகங்களினுல் ஏற்பாடு செய்யப்பட்ட கோடைகால வகுப்புகளுக்குச் சென்ற காரணத்தால், அவர்களால் பயன்படுத்தப்படாத கோடை விடுமுறைக் காலத்தை அவர்களது ஈட்டிய விடுப்புக் கணக்கில் சேர்க்கப்பட வேண்டும் என்று, அவர்கள் அரசுக்கு முறையீடு செய்துள்ளது உண்மையா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. பி.ஆர். தாமஸ் : இவ்வாறு வெங்கடேஸ்வரா பல்கலைக்கழகத்திற்கு, பள்ளிக் கல்வி இயககுநர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுச் சென்ற ஆசிரியர்களுக்கு ஈட்டிய விடுப்பு வசதி வழங்கப்பட்டுவிட்டதாகக் கேள்விப்படுகிறேன். ஆனுல் சில ஆசிரியர்கள் தாங்களாகவே, மதுரைப் பல்கலைக் கழகத்தில் கோடை விடுமுறையின்போது பயிற்சி வகுப்பில் சேர்ந்து பயிற்சி பெற்றிருக்கிறுர்கள். அவர்களுக்கு இதைப்போல் ஈட்டிய விடுப்பு வசதியை வழங்கி, அவர்களின் பதிவேட்டில் அதனைப் பதியும் வண்ணம் அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் நடத்தும் கோடைக்கால பயிற்சி வகுப்புகளுக்குச் செல்லும் ஆசிரியர்கள் அனுபவிக்காத கோடை விடுமுறை நாட்களை, அந்நாட்களுக்குத் தகுந்த ஈட்டிய விடுப்பாகக் கருதலாம் என்ற பொது உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திரு பி. ஆர். தாமஸ் : அந்தப் பொது உத்தரவின்படி, பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களின் அனுமதி பெற்று, அவரால் தேர்ந்தெடுக்கப்பட்டால்தான், இந்த ஈட்டிய விடுப்பு வசதி பெற முடியுமா அல்லது ஆசிரியர்கள் தாங்களாகவே நேரடியாக இத்தகைய பயிற்சி வகுப்புகளில் சேர்ந்து கோடை விடுமுறைப் பயிற்சி வகுப்புகளில் கலந்து கொண்டால், இத்தகைய ஈட்டிய விடுப்பு வசதி அவர்களுக்கும் அனுமதிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : சென்ற ஆண்டு முதல் கோடை காலப் பயிற்சி வகுப்புகள் ரத்து செய்யப்பட்டு விட்டன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. முத்துசாமி: பொதுவாக, கோடை விடுமுறையை அனுபவிக்க முடியாத நிலையில் பயிற்சி வகுப்புகளில் கலந்து கொண்டு பயிற்சி பெறுகிற ஆசிரியர்கள், பயிற்சி பெற்ற நாட்களுக்கு ஈட்டிய விடுப்பாகக் கருதப்படுவதற்கு பொது சுற்று அறிக்கை அனுப்பப்பட்டிருப்பதாக மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இப்படிப்பட்ட சுற்றறிக்கை போடப்பட்டிருந்தும், சேலம் மாவட்டத்திலும், கோவை மாவட்டத்திலும் உள்ள சீப் எஜுகேஷனல் ஆபீசர்கள் அலுவலகங்களில் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு இந்த வசதி வழங்கப்படாதது குறித்து அரசுக்குப் பல முறையீடுகள் வந்திருக்கின்றன. அப்படி வந்த முறையீடுகளின் மீது என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அது பற்றிய விவரம் இல்லை. அது என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டால், அது பற்றி நடவடிக்கை எடுக்கப்படும்.

School Teachers.

*44 Q.—Thiru P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that Government school teachers are eligible to have the earned leave credited to their account in proportion for their attendance at the Orientation Courses conducted in Mathematics and Science during the summer vacation in May 1975 and for their attendance at the in-service Training in New Mathematics and Science during the summer vacation in May 1974;

(*b*) if so, whether the aided school teachers are eligible for this benefit; and

(*c*) if not, the reasons therefor?

பள்ளி ஆசிரியர்கள்.

திரு. பி. ஆர். தாமஸ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) அரசுப் பள்ளி ஆசிரியர்கள், 1975ஆம் ஆண்டு மே மாதக் கோடை விடுமுறையில், கணக்கு, விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் நடந்த மறு பயிற்சி வகுப்பிற்கு வந்த நாட்களின் எண்ணிக்கையைப் பொறுத்தும், 1974ஆம் ஆண்டு மே மாதக் கோடை விடுமுறையின்போது புதுமுறைக் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் நடந்த பணியிடைப் பயிற்சி வகுப்பிற்கு வந்த நாட்களின் எண்ணிக்கையைப் பொறுத்தும் ஈட்டிய விடுப்பு அவர்களுடைய கணக்கில் சேர்க்கப்படுவதற்குத் தகுதியுடையவர்கள் என்பது உண்மையா?